

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தலைமையில் நேற்று (5.7.2024) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் சட்டம் ஒழுங்கு மற்றும் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துவுராஜ், மாநகர காவல் ஆணையர் பிரவீன் குமார் அபினபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெயபீம், திருப்பூர் சார் ஆட்சியர் செல்வி சௌம்யா ஆனந்த், மாநகர துணை காவல் ஆணையர்கள் கிரிஷ் அசோக் யாதவ், ராஜராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் கோ.மலர்விழி, உதவி ஆணையர் (கலால்) ராம்குமார் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த தவறை மறைத்து கழக அரசு மீது குறை கூறுவதா?

# ஜூன் - ஜூலை மாதங்களுக்கான துவரம்பருப்பு - பாமாயில் அனைவருக்கும் வழங்கப்படுகிறது!

## உணவு – உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி – எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு கண்டனம்!

சென்னை, ஜூலை 6-

ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமிக்கு பதில் அளித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் அர.சக்கரபாணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் அ.தி.மு.க. ஆட்சியில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் (அதுவும் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற பிப்ரவரி மாதத்தில்) துவரம் பருப்பு மற்றும் பாமாயில் முற்றிலுமாக விநியோகிக்கப்படவில்லை.

மே மற்றும் ஜூன் மாதங்களில் தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற்று, கொள்முதல் செய்து அவர்கள் ஆட்சியில் போல் இல்லாமல் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எல்லோருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பாக 18.06.2024 அன்று விரிவாக அறிக்கை வெளியிட்டு மே மாதம் பெற்றுக்கொள்ள இயலாதவர்கள் ஜூன் மாதம் முழுதும் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்திருந்தேன். அதன்படி மே மாதத்திற்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் முற்றிலும் நகர்வு செய்யப்பட்டுக் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டு விட்டன.



27.06.2024 அன்று உணவுத்துறை மானியக் கோரிக்கையின் போதும் இதுபற்றிக் குறிப்பிட்டு ஜூன் மாதம் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பெற்றுக் கொள்ளாதவர்கள் ஜூலை மாதம் முழுதும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவித்திருந்தேன். அதன்படி அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்குத் துவரம் பருப்பும் பாமாயிலும் வழங்கப்பட்டு வருகின்றன. இதைத் தெரிந்து கொள்ளாமல் வேண்டுமென்றே கழக அரசு மீது வீண்பழி சுமத்தித் தன் "X" பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தன் ஆட்சிக் காலத்தில் இரண்டு மாதங்கள் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் யாருக்கும் வழங்காமல் இருந்ததை எண்ணிப் பார்க்காமல் அனைவருக்கும் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் வழங்கி வரும் கழக ஆட்சியைப் பற்றிக் குறை கூறுவது அழகா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் நிதி பகிர்வை உயர்த்தி,

# தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு முறையாக நிதியை ஒதுக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் இரா. கிரிராஜன் எம்.பி. வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 6-

ஒன்றிய அரசு நிதிப் பகிர்வை உயர்த்தி, தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு முறையாக நிதியை ஒதுக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் பேசியது வருமாறு :

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்று தொடங்குகிறேன். எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இந்தத் தேர்தலில் இந்தியா கூட்டணி ஒற்றுமை கண்டு சார் சோ பார் 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று மார்தட்டிக் கொண்டவர்கள் இப்போது மூலை முடுக்குகளில் ஓரங்கட்டபட்டுள்ளனர்.

அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கிய அண்ணல் அம்பேத்கரின் சிலையை இந்த அரசு, இந்த நிர்வாகம் இடம் மாற்றியுள்ளது. ஆனால் ஒரு நாள் அது மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்படும். உங்களால் அம்பேத்கரின் சிலையைத்தான் இடம் மாற்றம் செய்ய முடியும் ஆனால் அரசியல் அமைப்பு சட்டத்தை மாற்ற முடியாது.

**பா.ஜ.க.வுக்கு ராகு காலம்!**

ஆட்சிக்கு வருவதற்கு முன் என்ன சொன்னீர்கள்? 400 தொகுதிகளில் வெற்றி பெற்றால் அரசியல் சாசனத்தை மாற்றி விடுவோம் என்றீர்கள். ஆனால் இப்போது நீங்கள் ஒரு பரிதாபகரமான சூழ்நிலையில் இருக்கிறீர்கள் நேற்று எங்கள் மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா அவர்கள் பேசியபோது நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்றாலும் மகிழ்ச்சியாக இல்லை. உங்களால் இந்த அரசை முழுமையாக ஐந்து ஆண்டுகள் நடத்த முடியாது. ஆனால் நாங்கள் வெற்றி வாய்ப்பை இழந்து இருந்தாலும் இந்த மன்றத்திலே மக்களுக்கான பிரச்சினை இன்னும் ஐந்து ஆண்டுகள் அல்ல தொடர்ந்து பேசுவோம். இது ராகுல் காலம், ஆனால் பா.ஜ.க.வுக்கு இது ராகு காலம்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அவைத்தலைவருக்கு நன்றி, எனது அன்பிற்குரிய கட்சித் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் எங்களது வளர்ந்துவரும் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கும் நன்றி.

குடியரசுத் தலைவரின் உரையில் எவை எவை விடுபட்டுள்ளது என்பதை இந்த மதிப்பிற்குரிய அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். முக்கியமான விடயங்களில் இந்த அரசாங்கம் அடைந்த தோல்விகள் தொடர்பாக ஜனாதிபதி குறிப்பிட தவறிவிட்டார். அவரது உரையில் பல முக்கியமான பிரச்சினைகள் விடுபட்டுள்ளன.

**மணிப்பூரில் எடுத்த நடவடிக்கை என்ன?**

மணிப்பூர் மாநிலத்தில் என்ன நடக்கிறது, மணிப்பூரில் நடக்கும் இனக் கலவரத்தை தடுத்து நிறுத்தவும் மணிப்பூர் மாநிலத்தில் அமைதியையும் இயல்பு நிலையையும் மீட்டெடுக்கவும் அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளதா? என்பதை குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிடப்படவில்லை.

மணிப்பூரில் இருந்து விலகி இருக்கும் பிரதமரிடமிருந்து ஒரு உறுதியான பதிலை நாங்கள் எதிர்பார்க்கிறோம். மேலும் இந்த பற்றிஎரியும் பிரச்சினை குறித்து எதுவும் பேசவில்லை. இதில் துரதிருஷ்டவசமான விஷயம் என்னவென்றால் பிரதமர் நரேந்திர மோடி மணிப்பூருக்கு சென்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தமிழ்நாட்டில் எங்கள் அன்பிற்குரிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழக விவசாயிகளை காப்பாற்ற 1989ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த போது விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்தார். இப்போது இந்தியாவில் என்ன நடக்கிறது? விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது என்பது மிகவும் துரதிருஷ்டவசமானது. கடந்த 10 ஆண்டுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் தகவல்படி ஒவ்வொரு நாளும் 30 விவசாயிகள் தற்கொலை செய்து இறக்கின்றனர். தமிழ்நாட்டில் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் வழங்கிய இலவச மின்சாரம் தமிழகத்தில் இன்றளவும் தொடர்கிறது. தமிழகத்தின் அடிச் சுவட்டை மத்திய அரசும் பின்பற்ற வேண்டும். மேலும் கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலும் உள்ள விவசாயிகளின் அனைத்து விவசாயக் கடன்களையும் ஒன்றிய அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) அமல்படுத்த வேண்டும்.



**நீட் தேர்வு குறித்து விவாதம் நடத்த முன்வாரீர்!**

நீட் தேர்வை பொருத்த வரையில், இந்த அவையில் விவாதம் நடத்த இந்த ஒன்றிய அரசு முன்வரவில்லை. வினாத்தாள் கசிவால் நீட் தேர்வு எழுத விரும்பும் லட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். ஆரம்பத்தில் இருந்தே திராவிட முன்னேற்றக் கழகம் நீட் தேர்வை எதிர்க்கிறது, நீட் தேர்வு தேவையற்றது. ,இது தி.மு.க வின் நிலை. தமிழகத்தில் இதுவரை 17க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தமிழ்நாடு சட்டப் பேரவையில் நீட் விலக்கு கோரி இரண்டு மசோதாக்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டன. இரண்டு நாட்களுக்கு முன்பு, நீட் தேர்வை விலக்களிக்க வேண்டி தமிழக சட்டப்பேரவையில் மேலும் ஒரு மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டின் குரலுக்கு இந்த அரசு இது வரையில் செவி சாய்க்கவில்லை.

**5 லட்சம் வன்கொடுமை வழக்குகள் பதிவு!**

இந்தியாவில் ஒட்டுமொத்த வேலையின்மை 10 சதவிதத்தை தாண்டி விட்டது. 2014 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 5.4 சதவிதமாக இருந்தது. தற்போதைய நிலவரப்படி இது 10.03 சதவிதமாக உள்ளது. ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தருவதாக இந்த அரசு வாக்குறுதி அளித்துள்ளது. ஆனால் இந்த ஒன்றிய அரசு இது வரை கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசு பல லட்சம் காலிப்பணியிடங்கள் நிரப்பவில்லை. இந்த அரசு எத்தகைய இக்கட்டான செயல்படாத நிலையில் உள்ளது என்பதற்கு இதுவே போதுமான சான்றாகும். இந்த அரசின் கடந்த பத்தாண்டு கால ஆட்சியில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன. உள்துறை அமைச்சகத்தின் தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் அறிக்கையின்படி கடந்த 10 ஆண்டுகளில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கு எதிரான தாக்குதல்களும், வன்கொடுமைகளும் தடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 10 ஆண்டுகளில் 8,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் IITs, IIMs, IIITs, NITs, IISERs ஆகியவற்றில் எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி. மற்றும் சிறுபான்மை சமூக மாணவர்கள் கல்வியை தொடராமல் வெளியேறியுள்ளார்கள். மேலும் நாடு முழுவதும் கல்வி வளாகங்களுக்குள் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் நாட்டின் முதன்மை கல்வி நிறுவனங்களில் இருந்து படிப்பை பாதியில் நிறுத்துவதைக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும். உயர் கல்வி நிறுவனங்களில் தற்கொலைகளைத் தடுக்க வேண்டும், சக மாணவர்களினால் ஏற்படுத்தப்படும் மனஅழுத்தத்தை எதிர்த்துப் போராட ஏழை மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளை அளித்திட வேண்டும் என்று அரசை நான் வலியுறுத்துகிறேன்.

**நிதிப் பகிர்வில் பாரபட்சம்!**

நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு பாரபட்சமும் அநீதியும் இழைத்து வருகிறது. ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் நிதியாணையத்தின் பரிந்துரைகளை பின்பற்றித் தான் மாநில அரசுகளுக்கு நிதி ஒதுக்குவதாக தெரிவித்துள்ளார். நிதி ஆணையம் என்றால் என்ன? நிதி ஆணையம் ஒன்றிய அரசால் நியமிக்கப்படுகிறது. நாங்கள் ஒன்றிய அரசிடம் எங்களது பங்கை, எங்களது உரிமைகளை கேட்கிறோம். எங்கள் கோரிக்கைகளுக்கு அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை. தற்போது ஒன்றிய அரசு 16வது நிதிக்குழுவை அமைத்துள்ளது. அதன் தலைவரும் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். அரசியலமைப்பின் 280 வது பிரிவின் கீழ் நிதி ஆணையம் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறது. ஒன்றிய நிதி தொகுப்பில் இருந்து தமிழ்நாட்டிற்கான நிதி பகிர்வை தற்போது உள்ள 43 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோளை இந்த அவையில் பதிவு செய்கிறேன். நாட்டிலேயே அதிக அநீதி இழைக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு தான். ஒன்றிய அரசு தமிழகத்திற்கு உரிய பங்கை வழங்க மறுக்கிறது, ஒன்றிய அரசின் மெத்தனமான, அலட்சியமான அணுகுமுறையால் தமிழ்நாடு மக்களுக்குக் கிடைக்க வேண்டியதை பறித்துக் கொள்கிறார்கள். இது போன்ற பல திட்டங்களை நான் குறிப்பிட முடியும். உதாரணமாக, 2015 இல், ஒன்றிய அரசாங்கம் மதுரை AIIMS திட்டத்தை அறிவித்தது. 2018 ஆம் ஆண்டில் நிலம் அடையாளம் காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டில், நிலம் அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில், அங்கு அடித்தளமிட ஒரு கல்லை கூட அங்கு வைக்கவில்லை. இப்படி தான் ஆளும் ஒன்றிய அரசால் தமிழக திட்டங்கள் சீரழிக்கப்படுகிறது. எங்களது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பை தீவிர பேரிடராக அறிவித்து பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளைத் மேற்கொள்ள தேவையான நிதியை ஒதுக்குமாறு பிரதமர் நரேந்திர மோடியை கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால், இதுவரை மாநில அரசு கோரிய நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கவில்லை.

ஒரு முக்கியமான விஷயம் பற்றிப் பேச விரும்பு கிறேன். காலனித்துவ ஆட்சியின் பிடியிலிருந்து நாட்டை வெளியே கொண்டு வருவதாக ஒன்றிய அரசு கூறுகிறது. ஆனால், அதே ஒன்றிய அரசு வெளிநாட்டு வழக்கறிஞர்களை இந்தியாவில் தொழில்செய்ய அனுமதிக்க யோசித்து வருகிறது. இவற்றை அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறேன்.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள கடந்த 10 ஆண்டுகால மோடி ஆட்சி நம்மை மீண்டும் காலனித்துவ ஆட்சிக்கு அழைத்துச் சென்றுள்ளது.

இந்த அதிகாரத்தின் உச்சியில் நீண்ட காலம் இருக்க முடியாது. தமிழ்நாட்டின் எங்களது இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் போன்ற இளந்தலைவர்களின் தலைமையில் இந்தியா முழுவதும் எதிர்காலத்தில் "திராவிட மாடல்" ஆட்சி செழித்தோங்கும் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்து முடிக்கிறேன்.

இவ்வாறு இரா.கிரிராஜன் எம்.பி. பேசினார்.



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் அன்னியூர் சிவாவை ஆதரித்து பல்லாவரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள.நந்தி வாடி ஊராட்சி பாக எண் 137 க்கு உட்பட்ட பகுதிகளில் ஊராட்சி தேர்தல் பணி பொறுப்பாளர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ பாக பொறுப்பாளர் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ். பெர்னார்ட் மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர் ஏ.கே.கருணாகரன் ஆகியோர் முன்னிலையில் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார். அப்பொழுது கிராமத்தைச் சேர்ந்த மகளிர் திரண்டு இருந்து வரவேற்பு அளித்தனர். க.ரமேஷ், ச.சிவகுமார், ஜெ.வி.சந்திரசேகர், ஜி.கருணாமூர்த்தி, கோ.ஜானகிராமன், ஜெ.இன்சாமாம், லோ.டில்லிபாபு, எம்.இளவரசன், எம.கமல்ராஜ், பி.கிஷோர், மணிரத்தினம், ஏ.டீசல்ராஜா மற்றும் நந்திவாடி ஊராட்சி கழக செயலாளர் டீ.சாரதி ஊராட்சி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

செய்தித்துறை முன்னாள் இணை இயக்குனர்

# மணிமாறனின் தந்தை ஏ.வி. இலக்குமிரமணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,ஜூலை.6–

செய்தித்துறை முன்னாள் இணை இயக்குநர் மணிமாறனின் தந்தை ஏ.வி.இலக்குமிரமணன் அவர்கள் இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**செய்தித்துறை முன்னாள் இணை இயக்குநர் மணிமாறன் அவர்களின் தந்தை ஏ.வி. இலக்குமிரமணன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன்.**

**கழகத்தின் மீது பற்றும் தலைவர் கலைஞர் மீதும் என் மீதும் அளவற்ற அன்பும் கொண்ட அவரது மறைவு மிகுந்த வேதனையைத் தருகிறது. வளர்த்து ஆளாக்கிய தந்தையை இழந்து தவிக்கும் மணிமாறன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இந்தத் துயர்மிகு நேரத்தில் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உ.பி.யில் சாமியார் பிரசங்கக் கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் பலி!

# பாதிக்கப்பட்டவர்களுக்கு ராகுல் காந்தி ஆறுதல்!

## அனைத்து உதவிகளும் கிடைக்க உறுதி!

ஹத்ராஸ், ஜூலை 6-

ஹத்ராஸ் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு கூடுதல் நிவாரணம் உடனடியாக வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்த பின்னர் உத்தரப்பிரதேச அரசுக்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் கடந்த 2 ஆம் தேதி, போலே பாபா சாமியார் நடத்திய பிரசங்க கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி நேரில் சந்தித்தார்.

டெல்லியில் இருந்து சாலை வழியாக ஹத்ராசில் உள்ள புல்ராய் கிராமத்திற்கு சென்ற ராகுல், பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று ஆறுதல் கூறினார்.

அப்போது காங்கிரஸ் சார்பில் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்க காங்கிரஸ் உறுதியாக போராடும் என ராகுல் காந்தி தெரிவித்தார்.



விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து மாநில ஆதிதிராவிட நலக்குழு அணியின் சார்பில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள விக்கிரவாண்டி ஒன்றியம் ஆசூர் கிராமத்தில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்த சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கி உதயசூரியன் சின்னத்திற்காக வாக்குகள் சேகரித்தார். உடன் ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் வி.பி.இராஜன், செ.புஷ்பராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாணவர் அணி துணைச் செயலாளர் சி.ஜெரால்டு, ஒன்றிய செயலாளர்கள் டி.தேசிங்கு, தங்கம் முரளி, சண் பிரகாஷ், ஜி.ராஜேந்திரன், பேபி சேகர், மற்றும் மாவட்ட நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.